2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 6

## பயிற்சி 1

பெயர் ______________________________________________________________

*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

உங்கள் தமிழ்க் கல்விக்கூடத்தில் இடம்பெற்ற வாணிவிழாவை விவரித்துச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

**செய்தித்தாள்**

செய்திகளை வெளியிடுவதில் செய்தித்தாள்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. "பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீதான்" என்று கவிஞர் கனகசுப்புரத்தினம் செய்தித்தாள் பற்றிக் கூறுகின்றார். மக்களிடையே எழுச்சியையும் அறிவொளியையும் ஏற்படுத்துவது செய்தித்தாள். இத்தகைய செய்தித்தாளின் தலைப்பு எப்பொழுதும் மக்களை ஈர்க்கும் வகையில் அமைதல் வேண்டும். செய்தித்தாளில் இடம் பெறும் செய்திகள் உண்மைத் தன்மை வாய்ந்தனவாக இருத்தல் வேண்டும். வாசிக்கும் உள்ளங்களில் ஆர்வத்தைத் தூண்டுவனவாக அமைதல் வேண்டும். செய்தித்தாளில் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள், அரசியற் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், விளம்பரங்கள், அறிவியற் கட்டுரைகள், கதைகள் போன்ற விடயங்கள் இடம் பெறுகின்றன. அதனாற்றான் மக்கள் விடிந்ததும் செய்தித்தாள் படிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

## 3. பந்தி அமைப்பு

ஒரு விடயத்தை விரித்து விளங்குவதாய் அமைவதே பந்தி எனப்படும். அதாவது ஒரு பிரதான கருத்தை விரித்துக் கூறுவது பந்தியாகும். பந்தி ஒன்றை எழுதுவதற்கு முன்:

- குறிப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- குறிப்புகளைக்கொண்டு சொல்லியங்களை எழுத வேண்டும்.
- எழுதிய சொல்லியங்களை கருத்துகளுக்கேற்ப ஒழுங்குபடுத்த வேண்டும்.

எ.கா. தலைப்பு: எமது உணவு

குறிப்புகள்:

- அடிப்படைத் தேவை
- உடல் வளர்ச்சிக்கு
- உடல் நலம் பேண
- வாழ்வதற்கு அவசியம்
- சத்தான உணவு
- உடல் ஆரோக்கியம்
- நிறையுணவு

**சொல்லியங்கள்:**

- உணவு மனிதனின் <u>அடிப்படைத் தேவைகளுள்</u> பிரதானமானது.
- <u>உடல் வளர்ச்சிக்கும்</u>, <u>உடல் நலம் பேணுவதற்கும்</u> உணவு அவசியம்.
- மனிதன் <u>வாழ்வதற்கு</u> உணவு இன்றியமையாதது.
- உண்ணும் <u>உணவு சத்து</u> நிறைந்ததாக இருக்க வேண்டும்.
- உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள <u>நிறையுணவு</u> அவசியமாகும்.

**ஒழுங்குபடுத்தப்பட்ட பந்தி:**

உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானதாகும். மனிதன் வாழ்வதற்கு உணவு இன்றியமையாததாகும். மனிதனது உடல் வளர்ச்சிக்கும் உடல் நலத்தைப் பேணுவதற்கும் உணவு அவசியமானது. எனவே, மனிதன் உண்ணும் உணவு சத்து நிறைந்ததாக இருக்க வேண்டும். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நிறையுணவு அவசியமாகும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

- பின்வரும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி அமையுங்கள்.

1) கூட்டினுள் அடைத்தான். சாப்பிடப் பழம் கொடுத்தான்.
2) கூட்டினுள் அங்கும் இங்குமாகப் பறந்தது.
3) தோட்டத்தில் ஒரி கிளி இரையைத் தின்று கொண்டிருந்தது.
4) வீட்டுக்குள் கொண்டு சென்றான்.
5) அங்கு வந்த நாதன் கிளியைப் பிடித்தான்.
6) கிளி சாப்பிடவே இல்லை. 'கீச்கீச்' என்று கத்திக்கொண்டேயிருந்தது.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

- பின்வரும் தலைப்புகளுக்குப் பொருத்தமான பந்தியை எழுதவும்.

<u>தமிழ்ப் பள்ளி</u>

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

- **பின்வரும் தலைப்புகளுக்குப் பொருத்தமான பந்தியை எழுதவும்.**

<u>எனக்குப் பிடித்த நிறம்</u>

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

- **பின்வரும் தலைப்புகளுக்குப் பொருத்தமான பந்தியை எழுதவும்.**

<u>எனக்குப் பிடித்த பாடம்</u>

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

4. **பின்வரும் சொல்லியங்களை தமிழில் எழுதுவோம்.**

- We went to school.

______________________________________________

- He speaks in Tamil.

______________________________________________

- I had breakfast.

______________________________________________

- I travel by bus.

______________________________________________

- I wake up early every day.

______________________________________________

- I am writing an article.

______________________________________________

- I go to Tamil school every Sunday.

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

**5. பொருத்தமான விடையைத் தேர்வு செய்வோம்.**

- தமிழில் உள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை ________________.

  216 30 18 12

- சிங்கம் முழங்கும். அதுபோல ஆந்தை ________________.

  கதறும் அலறும் கத்தும் ஊளையிடும்

- தமிழர் பண்பாட்டில் தலைசிறந்தது ________________.

  மணம் மானம் மனம் கனம்

- வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உணவளிப்பது ____________________ ஆகும்.

  மானம் விருந்தோம்பல்

  சோம்பல் விழுப்புண்

- கல்+குகை என்பதைச் சேர்த்து எழுதினால் ____________________.

  கல்க்குகை கல்குகை

  கற்குகை கற்க்குகை

- ஒலி வடிவமாகவும் வரி வடிவமாகவும் ________________ அமையும்.

  ஓவியம் சிற்பம்

  மொழி நாட்டியம்

- தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள் ________________ ஆகும்.

  216 147 247 60

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6